அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி,சென்னை-32.

அரசு தலைமை மின் ஆய்வாளர் அவர்களின் செயல்முறை ஆணை

அளிப்பு : திரு. ஞா. ஜோசப் ஆரோக்கியதாஸ், பி.இ., எம்.பி.ஏ.

*****

<u>செ.மு.ஆ.எண்: 37107/இ2/2023</u> <u>நாள்: 25.3.2025</u>

பொருள்: பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - இத்துறையில் பணிபுரிந்து இயற்கை எய்திய திரு. வெ. ஆனந்தன், கண்காணிப்பாளரின் மகள் செல்வி. ஆ. கமலிகா-க்கு இளநிலை உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கியது - பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. அ.ஆ.(நிலை) எண். 18, தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் (Q1) துறை, நாள் 23.1.2020.
2. அ.ஆ.(நிலை)எண். 33, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாடு (Q1) துறை, நாள் 8.3.2023.
3. மிஆ/சென்னை (தெற்கு) கடித எண். 565/மிஆ/செ(தெ)/ 2023, நாள் 12.02.2024 (உடன் பெறப்பட்ட திருமதி. ப. காளியம்மாள்-ன் 5.2.2024 நாளிட்ட கடிதம்).
4. அதமிஆ-ரின் க.எண். 37107/இ2/2023, நாள் 21.01.2022.
5. மிஆ/சென்னை (தெற்கு) க.எண். 4495/மிஆ/செ(தெ)/ 2023, நாள் 27.02.2024.
6. அதமிஆ-ரின் க.எண். 37107/இ2/2023, நாள். 04.03.2024.
7. மிஆ/சென்னை (தெற்கு) க.எண்.4495/மிஆ/செ(தெ)/ 2023, நாள் 10.05.2024 (உடன் பெறப்பட்ட செல்வி. ஆ. கமலிகா-ன் விண்ணப்பம். (இணைப்புகளுடன்)).
8. அதமிஆ-ரின் க.எண். 37107/இ2/2023, நாள். 29.07.2024.
9. மிஆ/சென்னை (தெற்கு) க.எண்.4495/மிஆ/செ(தெ)/ 2024, நாள் 1.8.2024 (விண்ணப்பதாரரின் சான்றிதழ்களுடன்).
10. அதமிஆ-ரின் க.எண். 37107/இ2/2023, நாள் 14.8.2024 (அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு முகவரியிட்டது).
11. அரசு தேர்வுகள் உதவி இயக்குநரின் ந.க.எண். 010809/அ1/2024, நாள் 30.8.2024.
12. அதமிஆ-ரின் செ.மு.ஆ.எண். 37107/இ2/2023, நாள் 29.10.2024.
13. செல்வி. ஆ. கமலிகா, இளநிலை உதவியாளரின் 4.11.2024 நாளிட்ட பணியேற்புக் கடிதம்.

*****

ஆணை:

இத்துறையின் கோட்ட அலுவலகமான, மின் ஆய்வாளர்/சென்னை (தெற்கு) அலுவலகத்தில், கண்காணிப்பாளராகப் பணிபுரிந்த திரு. வெ. ஆனந்தன், மாரடைப்பின் காரணமாக 18.12.2023 அன்று காலமானதைத் தொடர்ந்து, அவரது இளைய மகள் செல்வி. ஆ. கமலிகா–க்கு பார்வை 12–ல் காணும் செயல்முறை ஆணையில் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணித் தொகுதியின் கீழ் வரும் இளநிலை உதவியாளர் பதவியில் தற்காலிகப்பணி நியமன ஆணை வழங்கப்பட்டு, அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணியமர்த்தப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து, தனியர் 4.11.2024 முற்பகல் மின் அரசு தலைமை மின் ஆய்வாளர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியேற்றுக் கொண்டார்.

பார்வை 2–ல் காணும் அரசாணையில் வெளியிடப்பட்ட தமிழ்நாடு குடிமைப் பணிகள் (கருணை அடிப்படையில் நியமனம்) விதிகள், 2023–ன் கீழ் விதி எண். 16–ல், வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி, செல்வி. ஆ. கமலிகா, இளநிலை உதவியாளரின் தற்காலிக பணி நியமனத்தை அவர் பணியேற்ற நாளான 4.11.2024 முற்பகல் முதல் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

இவர் இளநிலை உதவியாளர் பதவியில் பணி வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு காலம் தகுதிகாண் பருவத்தில் இருப்பார் எனவும் தகுதிகாண் பருவகாலத்தில் பவானி சாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் இளநிலை உதவியாளருக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்) (திரு. ஞா. ஜோசப் ஆரோக்கியதாஸ்)
அரசு தலைமை மின் ஆய்வாளர்.

/உண்மை நகல் அனுப்பப்படுகிறது/

27-3-2025

ஆட்சி அலுவலர்.

பெறுநர்: செல்வி. ஆ. கமலிகா, இளநிலை உதவியாளர்,

நகல்: இருப்புக்கோப்பு.

ஆர்.சா./25.3.2025/